www.Padasalai.Net www.CBSEtips.in

Ts11T

# தென்காசி மாவட்டம்

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

20-11-2023

### வகுப்பு 11

கால அளவு: 1.30 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 45

**பகுதி - I**

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **9×1=9**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்

2) 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்'–யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர், மன்னரிடம் ஆ) அமைச்சர், கவிஞரிடம்

இ) மன்னர், அமுதவல்லியிடம் ஈ) மன்னர், அமைச்சரிடம்

3) ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க

அ) உதவியாளர் ஆ) காவலாளி இ) ஆசிரியர் ஈ) மேலாளர்

4) கலிங்க நாட்டார் சிங்கிக்கு அளித்த பரிசு

அ) பாடகம் ஆ) சிலம்பு இ) மெட்டி ஈ) தண்டை

5) 'பால்நிலாப்பாதை' என்ற நூலை எழுதியவர்

அ) ஏ.ஆர்.ரகுமான் ஆ) இளையராஜா இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா

6) 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர்வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

7) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

8) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க

| | | |
|---|---|---|
| அ) வீரியன் | - | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | - | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | - | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப் பூச்சி | - | 4) பாடகம் |

அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

9) 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியவர்.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன்

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.** 5×2=10

10) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

11) ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

12) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

13) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

14) செந்துறைப் பாடாண்பாட்டு - துறைவிளக்கம் எழுதுக.

15) கலைச் சொல்லாக்கம் - பொருள் தருக.

16) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

## பகுதி - III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** 4×4=16

17) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக்கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

18) உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

19) தமிழகப் பெண்கள் பாடிக் கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

20) ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

21) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

22) சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

## பகுதி - IV

**ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** 1×6=6

23) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

**(அல்லது)**

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

சிவக்குமார். மு,
ம.தி.ராம் மெட்ரிக் மேல்நி
வல்லம்-627809
தென்காசி மாவட்டம்.

## பகுதி - V

**குறிப்பு: அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×4=4

அ) 'சிற்றூரும்' ..... எனத் தொடங்கும் - புரட்சிக்கவி பாடல்.

- - - - - -

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com